(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 1 (1)]**

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2009, ஜூன் 12, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2009, ஜூன் 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0348 / ' 09

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, உடுகம கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் 2008 ஆம் ஆண்டு கல்வி பொது தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றிய பாடசாலைகள் எவை என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை, அவர்களுள் சித்தி அடைந்தோரின் எண்ணிக்கை மற்றும் சித்தியடைந்தோரின் வீதம் எவ்வளவு என்பதையும்,

(iii) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை அந்த பாடசாலைகளில் உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற் குறிப்பிட்ட கல்வி வலய பாடசாலைகளுள் 2008 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தரப்) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றிய பாடசாலைகள் எவை என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தோற்றியவர்களின் எண்ணிக்கை மற்றும் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை சித்தியடைந்தோர் வீதம் எவ்வளவு என்பதையும்,

(iii) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை அந்த பாடசாலைகளில் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தோர் எத்தனை வீதம் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) ஒட்டு மொத்தமாக மேற்கூறிய கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கல்விப் பொது தராதரம் மற்றும் உயர்தர கல்வி அபிவிருத்தியில் படிப்படியான வீழ்ச்சி அல்லது படிப்படியான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) கல்வி மட்டத்தில் ஏதேனும் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பின் அதனை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0349 / ' 09

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, நாகொடை, பரணதானாயம்கொட கனிஷ்ட வித்தியாலயம் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது,

(ii) மேற்படி பாடசாலைக்குரிய காணியை நன்கொடையாக வழங்கியவர் யார்,

(iii) மேற்படி பாடசாலை மூடப்பட்டு எவ்வளவு காலம் கடந்துள்ளது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கல்விமான் (வண) மாபலகம விபுலசார தேரர் மற்றும் சில ஆளுநர்கள் உட்பட பெருமளவு கல்விமான்களை நாட்டிற்கு வழங்குவதற்கு இப்பாடாசாலை அடிப்படை யாயிருந்ததென்பதையும்,

(ii) மேற்படி பாடசாலை மூடப்பட்டுள்ளமையால் குறைந்த வருமானம் பெறும் பெற்றோருக்கு, அதிக பணத்தைச் செலவிட்டு பாடசாலை வான் வண்டிகளின் மூலம் அண்மையிலுள்ள பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்ப நேரிட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) கட்டிடங்கள் உள்ளிட்ட வசதிகளைக் கொண்டுள்ள இப்பாடசாலைக்கு தமது பிள்ளைகளை அனுப்புவதற்கு பெற்றோர்கள் தயாராயுள்ளனர் என்பதால், தேவையான ஆசிரியர்களை வழங்கி எவ்வளவு காலத்தில் மேற்படி பாடசாலையை ஆரம்பிக்க அவர் நடவடிக்கை எடுப்பார்?

(ஈ) இன்றேல், ஏன்?

0350 / ' 09

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி - உடுகம வீதி மிகவும் பழமை வாய்ந்ததோர் துணை வீதி என்பதையும்,

(ii) தற்போது சில கட்டங்கள் ஊடாக காலி தொடக்கம் தலங்கஹ வரை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வீதியில் பஸ்வண்டிகள் உட்பட பெருந்தொகையான வாகனங்கள் நாளாந்தம் பயணிக்கின்றன என்பதையும்,

(ii) இந்த வீதியின் தலங்கஹ தொடக்கம் பஸ் சந்தி வரையிலான பகுதி அதிக வளைவுகளை கொண்டுள்ளதுடன் மிகவும் ஒடுங்கியம் பழுதடைந்த நிலையிலும் காணப்படுவதனால், பயணிக்கும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் சாத்தியக்கூறுகள் அதிகரித்து காணப்படுகின்றது என்பதையும்,

(iii) அதே போன்று, அநாவசியமான தாமதம் ஏற்படுகின்றது என்பதையும்,

(iv) கடந்த காலத்தில் உடுகம நெலுவ வீதி மற்றும் உடுகம அம்பலம் ஊடான யட்டலமன்ன வீதி உட்பட பல வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) தலங்கஹ தொடக்கம் பஸ் சந்தி வரையிலான பகுதயில் மாத்திரம் வீதியை அகலமாக்கி மதகுகளை அமைத்து அதனை அபிவிருத்தி செய்யாமைக்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) வீதியின் மேற்கூறிய பகுதியை அபிவிருத்தி செய்யும் பணி எந்த திட்டத்தின் கீழ் எவ்வளவு காலத்தில் மேற்கொள்ளப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0013 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007 ஆம் ஆண்டு திசெம்பரில் மேதகு சனாதிபதி அவர்கள் ஜப்பானுக்கு மேற்கொண்ட விஜயத்திற்கான மொத்த செலவு எவ்வளவு என்பதையும்,

(ii) இவருடன் சென்ற நபர்களது எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) இதனால் நாட்டிற்கு கிடைத்த நன்மைகள் என்னவென்பதையும்,

(iv) அவர்களது பெயர்களையும் கிடைத்த பயனின் அளவு என்னவென்பதையும்,

(v) இற்றைவரை கிடைத்த பயன்களின் அளவையும்,

(vi) கிடைக்கவுள்ள நன்மைகளையும் அதற்கான திகதிகளையும்,

(vii) இப்பயன்கள் எந்தத்துறை சார்ந்தவை என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இதற்கு பிரதிபலனாக ஜப்பானுக்கு நாம் என்ன வழங்கினோம் என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0097 / ' 09

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அதிமேதகு சனாதிபதியவர்களின் ஆலோசகர்களாக சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவ்விதமாக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் அல்லது விசேட தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி ஆலோசகர்களுக்காக சம்பளமோ படிகளோ செலுத்தப் படுகின்றனவா என்பதையும்,

(ii) ஆமெனில், 2008 ஆம் ஆண்டுக்காக ஒவ்வொருவருக்கும் வெவ்வெறாக எவ்வளவு பணத்தொகை செலுத்தப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) ஆலோசகர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள ஆட்கள் அனைவருக்காகவும் 2008 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0356 / ' 09

கௌரவ ஜினதாச கிதுலகொட,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) ஓய்வூதியத் திணைக்களத்தினால் நுவரெலியா மாவட்டத்தின் ரம்பொட நீர்வீழ்ச்சியை அண்மித்த பிரதேசத்தில் அமைப்பதற்கு தயாராகவுள்ள ஓய்வுபெற்றவர்களின் விடுமுறை விடுதிக்காக அனைத்து ஓய்வூதியம் பெறுநர்களின் 2009 பெப்ருவரி மாதத்திற்கான ஓய்வூதியத்திலிருந்து ரூ.50/-பங்களிப்புத் தொகையொன்று ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினரால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி பணத்தை ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கு முன்னர் ஒவ்வொரு ஓய்வூதியம் பெறுநரிடமிருந்தும் விருப்பம் பெறப்பட்டுள்ளதா என்பதையும் ,

(ii) இன்றேல் ஓய்வூதியம் பெறுநர்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்களது ஓய்வூதியத்திலிருந்து பணம் அறவிடுவதற்கு ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்துக்கு இருக்கின்ற சட்டரீதியான அதிகாரம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) ஓய்வூதியம் பெறுநர்களிடமிருந்து பலவந்தமாக அறவிடப்பட்டுள்ள ரூ.50/- பணத்தை மீண்டும் இவர்களுக்கு வழங்கும்படி ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0255 / ' 09

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 'அபி வெனுவென் அபி' நிதியம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இற்றைவரை இந் நிதியத்துக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட தொகை யாது,

(ii) இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் ஆட்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளினால் வழங்கப்பட்ட தொகை யாது,

(iii) 'அபி வெனுவென் அபி' நிதியத்துக்காக நிதி வழங்குமாறு மக்களைக் கோருவதற்காக மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கைகள் யாவை,

(iv) இப்பிரசார நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் எவ்வளவு,

(v) இப்பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நிதியத்திலிருந்து இற்றைவரை செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு,

(ii) இந்நிதியத்தினால் முப்படை அல்லது பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான வீடுகள் எங்கு அமைக்கப்பட்டுள்ளன

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீடுகளில் எத்தனை இற்றைவரை முப்படை வீரர்களுக்கு அல்லது பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன,

(ii) இந்நிதியத்தினால் கட்டப்படும் வீடுகள் வழங்கப்படும் முறைமை, விபரமாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

போக்குவரத்து அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 114, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இரண்டாயிரத்து இருநூற்று தொன்னூற்றியொன்பது மில்லியன் எட்டு இலட்சத்து முப்பதினாயிரம் (ரூபா 2,299.83.மில்லியன்) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | |
|---|---|---|
| தலைப்பு 114 | — போக்குவரத்து அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் மீண்டுவரும் செலவினம் | ரூ. 2,299.83 மில்லியன் |
| | | ரூ. **2,293.83 மில்லியன்** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஜூன் மாதம் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 இன் குறைநிரப்பும் மதிப்பீட்டின் மொத்தம் ரூபா. 450,000,000.

*

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 149, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இருநூறு மில்லியன் (ரூபா 200,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 149 | — | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆக்கப்பொருட் செலவினம் ரூ. | 200,000,000 |
| | | ரூ. | **200,000,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஜூன் மாதம் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 ஆம் 2 ஆம் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 2,749,830,000.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2009, ஜூன் 24, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0312 / ' 09

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி மாவட்டத்தின் ஹபராதுவ பிரதேச செயலகப் பிரிவில் 2000ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை பயிரிடப்பட்ட வயற் காணிகள் வருடாந்தம் எத்தனை ஏக்கர்களென்பதையும்,

(ii) 2008 ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட வயற் காணிகளில் பயிரிடப்படாத நிலையில் கைவிடப்பட்டுள்ள வயற் காணிகள் எத்தனை ஏக்கர்களென் பதையும்,

(iii) இப்பிரதேச செயலகப் பிரிவில் 350.00 ரூபா மாணிய விலையில் வருடாந்தம் வழங்கப்பட்ட உரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) இப் பிரதேச செயலகப் பிரிவில் கால்வாய்களையும் அணைக்கட்டுகளையும் புனரமைப்பதற்கு 2004 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு கருத்திட்டத்திற்கேற்ப வெவ் வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) "நாங்கள் பயிரிடுவோம் - நாட்டை கட்டியெழுப்புவோம்" நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து பயிரிடப்படாமல் கைவிடப்பட்ட நிலையிலிருந்த வயற்காணிகளை பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக, மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் கால்வாய்களையும் அணைக்கட்டுக்களையும் புனரமைப்பதற்கு வருடாந்தம் செலவுசெய்யப்பட்டுள்ள பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) 2004 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை பயிரடப்படாமல் கைவிடப்பட்ட நிலையிலிருந்த வயற் காணிகளின் சதவீதம் எவ்வளவென்பதையும்,

(iii) அனைத்து வயற்காணிகளையும் பயிரிடுவதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0353 / ' 09

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— மீள் குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கா/நாகொட பிரதேச செயலாளர் பிரிவில் பாதுகாப்பற்ற இடங்களில் குடியிருந்தவர்களின் வீடுகள் 2003 ஆம் ஆண்டு வெள்ளப் பெருக்கினால் அழிந்துவிட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவர்களில் எத்தனைபேருக்கு தல்கஸ்வல தோட்டத்தில் காணிகள் வழங்கப்பட்டுள்ளன,

(ii) இவ்வாறு நட்டஈடு வழங்கப்படவுள்ளவர்களுக்குச் செலுத்தப்படவுள்ள நிலுவை நட்டஈட்டுத் தொகை எவ்வளவு,

(iii) இவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிலுவை நட்டஈட்டுத் தொகை எவ்வளவு காலத்துக்குள் வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) மேற் குறிப்பட்ட இடங்களில் வீடுகள் இருந்து அவை அழிந்து போனாலும் , அங்கீகரிக்கப்பட்ட காணிகள் கிடைக்காமையால் பாதுகாப்பற்ற இடங்களில் தமது வீடுகளை மீண்டும் அமைத்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(ஈ) இவர்களுக்கு நட்டஈடு செலுத்தா உடன்படிக்கையின் கீழ் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தத்தின்போது நட்டஈடு செலுத்த முடியும் என்பதை நாகொட பிரதேச செயலாளர் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற ஆலோசனை குழுவுக்கு அறிவித்துள்ளார் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(உ) ஆமெனில் எதிர்கால அனர்த்தத்தின்போதன்றி, 2003ஆம் ஆண்டில் வீடுகள் அழிந்து போனதால் நட்டஈடு செலுத்த அங்கீகரிக்கப்பட்டிருப்பினும் மேற்குறிப்பிட்ட பாதுகாப்பற்ற இடங்களிலேயே வீடுகளை அமைத்துக் கொண்டிருக்கின்றவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிலுவை நட்டஈட்டுப் பணத்தை எவ்வளவு காலத்துக்குள் வழங்குவாரென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0354 / ' 09

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2000 ஆம் ஆண்டு முதல் 2008 டிசெம்பர் வரை இலங்கையின் வருடாந்த தேயிலை உற்பத்தி மற்றும் அவற்றில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு நாடுகள் ரீதியாக எத்தனை கிலோ என்பதையும் ,

(ii) தேயிலை ஏற்றுமதியினால் எமது நாட்டுக்குக் கிடைக்கப்பெற்ற வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் தனித் தனியாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு மற்றும் நாடுகள் யாவையென்பதை வெவ்வேறாகவும் ,

(ii) தேயிலை இறக்குமதிக்காக வருடாந்தம் செலவிடப்பட்ட மொத்தத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(இ) வேறு நாடுகளிலிருந்து நமது நாட்டுத் தேயிலைக்கு கட்டளை அனுப்புகின்ற போது மேற்படி கட்டளையாலர்கள் வேறு நாட்டுத் தேயிலைக்காகவும் (உதா: அசாம் தேயிலை ) கட்டளை அனுப்புவதாக சம்பந்தப்பட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போது உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளார்களென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(ஈ) அவ்வாறு கட்டளைகள் அனுப்பப்பட்ட வெளிநாட்டுத் தேயிலையின் அளவு மற்றும் தேயிலையின் ரகம் சம்பந்தப்பட்ட நாடுகள் ரீதியாக யாவையென்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(உ) மேற்படி கட்டளைகளின் பிரதிகளை அவர் இசசபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஊ) இலங்கையில் மிகச்சிறந்த தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்ற போது தேயிலையை இறக்குமதி செய்து இலங்கை தேயிலையுடன் கலந்து ஏற்றுமதி செய்வதன் மூலம் எமது தேயிலை ஏற்றுமதிக்கு பெரும் தீங்கு ஏற்படக்கூடும் என்பதால் தேயிலை இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கு அவர் துரித நடவடிக்கையெடுப்பாரா?

(எ) இன்றேல், ஏன் ?

0099 / ' 09

கௌரவ ஆர்.பி. ஏ.ரணவீர பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் பணியாற்றி வருகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்கள் மத்தியில் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) பட்டதாரி ஆசிரியர்களில் கலை, வணிக, விஞ்ஞான மற்றும் ஏனைய பட்டதாரிகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்,

(iv) உயர்தரப் பாடங்களை ஆங்கில மொழிமூலமாகக் கற்பிக்கின்ற அல்லது கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(v) அப்பட்டதாரிகள் மத்தியில் ஆங்கிலத்தைப் பட்டப்படிப்பிற்காக பயின்றுள்ள அல்லது ஆங்கில மொழிமூலமாகப் பட்டத்தைப் பெற்றுள்ளோரின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(vi) இப்பட்டதாரிகள் மத்தியில் கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தரம் ) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தரம்) பாடங்களை ஆங்கில மொழிமூலமாகக் கற்பிக்கப் போதியளவு எண்ணிக்கைகொண்ட ஆசிரியர்கள் இல்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0109 / ' 09

கௌரவ ஆர்.பி. ஏ.ரணவீர பதிரண,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் சட்ட உத்தியோகத்தரின் நியமனத் திகதி மற்றும் ஆட்சேர்ப்பு அடிப்படை என்ன என்பதையும்,

(ii) அந்த உத்தியோகத்தரை சேர்ப்பதற்கு, சேவையில் நிரந்தரமாக்குவதற்கு மற்றும் அவரின் சம்பளத்தை தீர்மானிப்பதற்கான பணிப்பாளர் சபை அனுமதி முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அவ்வாறெனின், மேற்கூறிய அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபை தீர்மானம் அடங்கிய ஆவணங்களை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறிய உத்தியோகத்தர் குறிப்பிட்ட கூட்டுத்தாபனத்துக்கும் குறிப்பிட்ட அமைச்சுக்கும் சமர்ப்பித்துள்ள சுய விபரங்கள் அடங்கிய தகவல்கள் முரண்பாடுகளைக் கொண்ட பொய்யானவையா என்பதையும்,

(ii) அந்த உத்தியோகத்தரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்,

(iii) அதற்காக பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) மேற்கூறிய விடயம் தொடர்பாக மோசடிகள் இடம் பெற்றிருப்பின் அது தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை என்ன என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0376 / ' 09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) மஹிந்த சிந்தனை கொள்கை விஞ்ஞாபனத்தின் 9ஆம் பக்கத்தில் (சிங்கள மொழிமூலம்) முன்மொழியப்பட்டுள்ளவாறு பிறப்பு முதல் 5 வயது வரையிலான பிள்ளைகளுக்கு பால் மா கொள்வனவு செய்வதற்காக மாதாந்தம் 200 ரூபா வீதம் வழங்குவது இது வரை செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இந்த 200 ரூபா வழங்குதல் செயற்படுத்தப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை,

(ii) இந்த 200 ரூபா வீதமான தொகை வழங்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0377 / ' 09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பபு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தின் 08ஆம் பக்கத்தில் (சிங்கள மொழிமூலம்) பிரேரிக்கப்பட்டுள்ளவகையில், தமது போசாக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாதுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் போசாக்குப் பொதியொன்றை இலவசமாக வழங்குதல் தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தற்பொழுது அப்போசாக்குப் பொதிகளை வழங்குவதை நடைமுறைப் படுத்தியுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள் யாவை,

(ii) அதன் பிரகாரம் போசாக்குப்பொதி வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாது,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0378 / ' 09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) நெதர்லாந்து அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்படுகின்ற அனைத்து உதவிகளும் முற்றிலும் நிறுதத்தப்பட்டுளளதாக அந்நாட்டு அமைச்சரொருவர் நெதர்லாந்து பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளாரென்பதைஅவர் அறிவாரா ?

(ஆ) மேற்படி உதவிகளை நிறுத்துவதற்கான காரணம், இலங்கைக்குள் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள், சிவில் மக்களின் மரணங்கள் மற்றும் சட்டத்தின் உன்னதத் தன்மையை களங்கப்படுத்தல் என மேற்படி கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) நெதர்லாந்து அரசாங்கத்துடன் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்வதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

## 2009, ஜூன் 25, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0330 / ' 09

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) "அப்பி வவமு - ரட்ட நகமு" என்ற வேலைத்திட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை காலி மாவட்டத்தின் பத்தேகம பிரதேச செயலக பிரிவில் வீட்டுத்தோட்ட கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு,

(ii) இக் கருத்திட்டங்களுக்காக கமத்தொழில் அமைச்சினால், மாகாண கமத் தொழில் அமைச்சினால், பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்தினால் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கான நிதியத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு,

(iii) இதன்படி, 2006 ஆம் ஆண்டிலும் 2008 ஆம் ஆண்டிலும் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் உரிய காணியின் அளவு வருட வாரியாக எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டை விட வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின் பொருட்டு திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை,

(ii) இதன்பொருட்டு மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்கு ஒதுக்குவதற்காக எதிர்பார்க்கப்படும் தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0379 / ' 09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) மஹிந்த சிந்தனை கொள்கை பிரகடணத்தின் 09 ஆம் பக்கத்தில் (சிங்கள மொழி) பிரேரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் முன்பள்ளி ஆசிரியைகளுக்குத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் நிதி வசதிகளை மாதாந்தம் வழங்குதல் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) (i) தற்போது மேற்படி பயிற்சி மற்றும் நிதி வசதிகள் வழங்கப்படும் பிரதேச செயலகப் பிரிவுகள் யாவையென்பதையும் ,

(ii) அதன் பிரகாரம் ,மேற்படி தோழில்நுட்பப் பயிற்சி மற்றும் நிதி வசதி வழங்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0380 / ' 09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வங்கிகள் பலவற்றுடன் செய்துகொண்ட ஹெஜின் ஒப்பந்தத்தின் விளைவாக வங்கிகளுக்கு 1.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்படவேண்டியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், ஒவ்வொரு வங்கிக்கும் செலுத்தப்படவேண்டிய பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0382 / ' 09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அரசாங்கம் / இலங்கை மத்திய வங்கி கடந்த 2 ஆண்டு காலப்பகுதியில் தனியார் வங்கிகளிலிருந்து கடன் பெற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி கடன் பெறப்பட்ட வங்கிகளும், பெறப்பட்ட கடன் தொகையும் யாதென்பதையும்,

(ii) மேற்படி கடன் தொகையும், அதற்கான வட்டியும் செலுத்தப்பட வேண்டிய கால எல்லை யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் நிதி நிர்வாகம் பற்றிய அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உள்ளதால் மேற்படி தனியார் வங்கிகளிலிருந்து குறிப்பிட்ட கடன்களைப் பெறுவதற்காக பாராளுமன்றத்தின் அனுமதி பெறப் பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இல்லையெனில், மேற்படி கடனைப் பெறுவதன் மூலம் இலங்கையின் அரசியலமைப்பு மீறப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

## 2009, ஜூன் 26, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0014 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007 ஆம் ஆண்டு நவெம்பரில் மேதகு சனாதிபதி ஈரானுக்கு மேற்கொண்ட பயணத்திற்கான மொத்தச் செலவையும்,

(ii) உடன் சென்றவர்களின் எண்ணிக்கையையும்,

(iii) அதனால் நாடு பெற்றுக்கொண்ட நன்மைகளையும்,

(iv) அவை என்னவென்பதையும் மற்றும் அவற்றின் அளவையும்,

(v) இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட அளவையும்,

(vi) இன்னும் பெற்றுக்கொள்ளப்படவிருக்கின்ற எண்ணிக்கையை அதன் திகதி வாரியாகவும்,

(vii) அவ்வுதவிகள் எத்துறைகள் சார்ந்தவை என்பதையும்

அவர் இச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இதற்குப் பதிலாக, ஈரானுக்கு நாம் என்ன வழங்கினோம் என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0384 / ' 09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த ஜனாதிபதி தேர்தலில் சமர்ப்பிக்கப்பட்ட மஹிந்த சித்தனை என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கைத்தொழில் சாலைகளை ஆரம்பித்து 500 பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்ததை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) அந்த தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் என்ன என்பதையும்,

(iii) வழங்கப்பட்டுள்ள தொழில்வாய்ப்புக்கள் எவ்வளவு என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0256 / ' 09

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் தற்பொழுது இயங்குகின்ற அரசாங்க பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் தனியார் பாடசாலைகள் என்பவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(ii) கல்விக் கோட்டங்களின் அடிப்படையில் அவற்றின் பெயர்கள் யாவை,

(iii) மேற் குறிப்பிட்ட அரசாங்க பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்கள் என்பவற்றிற்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கையும் இப்பொழுதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் இயங்கிய அரசாங்க பாடசாலைகள், பிரிவெனாக்கள் ஆகியவற்றில் தற்பொழுது மூடப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை கல்விக் கோட்டங்களின் அடிப்படையில் எவ்வளவு,

(ii) அப்பாடசாலைகளும் பிரிவெனாக்களும் எந்த ஆண்டு மூடப்பட்டன,

(iii) அவை அவ்வாறு மூடப்பட்டதற்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) ஏதேனும் ஒரு காரணத்திற்காக மூடப்படவிருந்த பாடசாலைகளும் பிரிவெனாக்களும் மூடப்படுவதைத் தடுப்பதற்கு அவர் உரிய நடவடிக்கை எடுப்பாரா,

(ii) ஆமெனில், அந்நடவடிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0257 / ' 09

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம்,தமிழ் மற்றும் ஜப்பான் மொழியை கற்பிப்பதற்காக "கிராமிய கல்வி அபிவிருத்தி நிலையம்" எனும் நிறுவனமொன்று தென் மாகாணம் உட்பட பல மாகாணங்களில் செயற்பட்டு வருகின்றதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி பாடசாலைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்ற ஏனைய மாகாணங்களும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளும் யாவையென்பதையும்,

(iii) அதற்காக கல்வி அமைச்சிலிருந்து அல்லது மாகாண கல்வி அமைச்சுகளிலிருந்து மேற்படி நிறுவனத்துக்கு அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளதா என்பதையும்,

(iv) அது எப்போது, எவரால், எத்தகைய நிபந்தனைகளின் கீழ் என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப் படுவதாயின் ஒரு மாணவனிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும் ,

(ii) கல்வி அமைச்சு அல்லது வேறு அரச நிறுவனமொன்று அதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளதா என்பதையும் ,

(iii) மேற்படி கருத்திட்டத்துக்கான ஆசிரியர்களை சேர்ப்பதற்கு மேற்படி நிறுவனம் பின்பற்றுகின்ற வழிமுறை யாதென்பதையும் ,

(iv) மேற்படி ஆசிரியர்கள் ஆங்கிலம், தமிழ் அல்லது ஜப்பான் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்கு தகுதியுள்ளவர்கள் என்பதற்கான சான்றுள்ளதா என்பதையும் ,

(v) கல்வி அமைச்சு அல்லது மாகாண கல்வி அமைச்சு வேறு அரச நிறுவனமொன்று மேற்படி கருத்திட்டத்தை மேற்பார்வை செய்கின்றதா என்பதையும் ,

(vi) ஆமெனில், அது யாரால் என்பதையும் ,

(vii) கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்று அல்லது பெறப்படாது இருக்கையில், சம்பந்தப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் செயற்படா திருப்பின், மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப் படுத்துதல் சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0258 / ' 09

கௌரவ அஜித் குமார,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) சுனாமி பேரழிவின் பின்னர் காலி, மகமோதர வைத்தியசாலைக்கு மாற்று வைத்தியசாலையாக கராபிட்டிய வைத்தியசாலையின் அருகில் வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அந்த வைத்தியசாலைக்கு அடிக்கல் நாட்டியது எப்போது என்பதையும்,

(iii) அந்த வைத்தியசாலைக்கான நிதி ஒதுக்கீடு எந்த நாட்டின், எந்த நிறுவனத்தின், எந்த நபரால் வழங்கப்படுகின்றது என்பதையும்,

(iv) அந்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(v) வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு ஒரு கடனா அல்லது உதவியா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த வைத்தியசாலையின் ஆரம்பத்திட்டத்தின்படி மாடிகளின் எண்ணிக்கை மற்றும் அதில் உள்ளடங்கும் வசதிகள் என்ன என்பதையும்,

(ii) அந்த திட்டம் பின்னர் மாற்றப்பட்டிருப்பின் அதற்கிணங்க அதன் மாடிகளின் எண்ணிக்கை மற்றும் உள்ளடங்கும் வசதிகள் என்ன என்பதையும்,

(iii) அந்த வைத்திசாலைக்காக தற்போது கிடைத்துள்ள பணம் எவ்வளவு என்பதையும்,

(iv) தற்போது நிர்மாணப் பணிகள் எந்தளவில் இருக்கின்றன என்பதையும்,

(v) மேற்படி வைத்தியசாலையை நிர்மாணிக்கும் நிறுவனம் எது என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2009, ஜூன் 26, வெள்ளிக்கிழமை)**

0247 / '08

கௌரவ அஜித் குமார,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தபால் மாஅதிபரின் இலக்கம் 10/10/2525/2004 (05) மற்றும் 2005.09.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஒருங்கிணைந்த தபால் சேவையின் 'அ' பகுதியின் III ஆம் தரத்தின் "அ" பிரிவின் பதவிகளுக்கு பதவி உயர்த்துகின்ற நேர்காணல் பரீட்சையின் பொருட்டு 2005.10.12 ஆம் திகதியிலிருந்து 2005.10.14 ஆம் திகதி வரை தபால் தலைமையகத்திற்கு அழைக்கப்பட்ட ஒருங்கிணைந்த தபால் சேவையின் "அ" பகுதியின் III ஆம் தரத்தின் "ஆ" பிரிவின் பிரதம தபால் நிலையப் பொறுப்பதிகாரி, நிர்வாக உதவியாளர், தபால் அலுவலக ஆய்வுப் பரிசோதகர் மற்றும் தபால் அலுவலக கணக்குப் பரிசோதகர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் உத்தியோகபூர்வ முகவரிகள் யாவை,

(ii) மேற்படி நேர்காணல் பரீட்சைக்குச் சமுகமளித்தவர்களில் 2007.07.31 ஆம் திகதியன்று ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின் "அ" பகுதியின் III ஆம் தரத்தின் "அ" பிரிவுக்கு பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது,

(iii) மேற்படி உத்தியோகத்தர்களின் பெயர்கள், பதவிகள், பதவி உயர்வுகள் வழங்கப்பட்ட திகதிகள் மற்றும் உத்தியோகபூர்வ முகவரிகள் யாவை,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0249 / '08

கௌரவ அஜித் குமார,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அஞ்சல் மா அதிபரின் 10/10/அIIIஅ /03 /06 ஆம் இலக்கமும் 2006.02.27 ஆம் திகதியும் கொண்ட கடித்தத்தின் மூலம் அரச சேவை ஆணைக்குழுவின் காப்பு அங்கீகாரத்திற்குட்பட்டு, தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சின் செயலாளரது அங்கீகாரத்தின் படி 2006.03.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வண்ணம் ஒருங்கிணைந்த தபால் சேவையின் "அ" தொகுதியின் III ஆம் தரத்தின் "அ" பிரிவின் வெற்றிடங்களுக்கான பதவிகளில் முழுநேர பதில் கடமையாற்றும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் கடமை முகவரிகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி உத்தியோகத்தர்களில் 2007.03.31 ஆம் திகதியில் 60 வயது பூர்த்தியானதால் ஓய்வு பெறச்செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) இவர்களின் பெயர்கள், தனிப்பட்ட முகவரிகள் மற்றும் ஓய்வு பெறும்போது வகித்த பதவிகள் என்பவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா ?

(இ) மேற்படி (அ) பிரகாரம், முழுநேர பதில் கடைமையாற்றும் பொருட்டு புத்தளம், பதுளை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டு பிராந்திய தபால் அத்தியட்சகர்களாகக் கடமையாற்றிய திரு. ஜீ. கொடகே , திரு. கே.ஜீ. கமேகே மற்றும் திரு. ஆர். ஏ. கொட்டஹச்சி ஆகியோர் முறையாக 2006.08.22, 2006.12, 21 மற்றும் 2007.02.09 ஆகிய திகதிகளில் 60 வயதை பூர்த்தி செய்ததால் ஓய்வு பெறச்செய்யப்பட்டுள்ளனர். எனவே நான்கு தசாப்தங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைக் கொண்டுள்ள இவர்கள் மூவரது பதிற் கடமையாற்றப்பட்ட பதவிகளை நிரந்தரமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2009, ஜூலை 07, செவ்வாய்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0209 / ' 09

கௌரவ பேமசிறி மானகே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி அவர்கள் இலங்கைக்கு எத்தனை முறை விஜயம் செய்துள்ளார் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர் இலங்கைக்கு விஜயம் செய்த திகதிகளையும், எச்செயற்பாடுகளுக்காக வருகை தந்தார் என்பதையும்,

(ii) அவர் இலங்கைக்கு விஜயம் செய்து கலந்துரையாடல்களை நடத்திய நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0211 / ' 09

கௌரவ பேமசிறி மானகே,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) நங்கூரத் தளங்களுக்கும் மீன்பிடித்துறைமுகங்களுக்கும் அருகாமையில் டின்மீன் கைத்தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுமென "மஹிந்த சிந்தனையில்" குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) "மஹிந்த சிந்தனைக்குப்" பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ள டின் மீன் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் அவை ஆரம்பிக்கப்பட்ட திகதிகளும் யாவையென்பதையும்,

(ii) இக் கைத்தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இடங்களின் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) இக் கைத்தொழிற்சாலைகளின் உற்பத்திக் கொள்ளலவு எவ்வளவென் பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0059 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) "அபி வெனுவென் அபி" நிதிக்காக ரூ. 100,000/= இற்கு மேற்பட்ட தொகையை நன்கொடையாக வழங்கிய அரசாங்கத் திணைக்களங்களின் பெயர்களை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஆயுதப்படையினருக்காக கட்டப்பட்ட வீடொன்றிற்கான செலவு என்ன என்பதையும்,

(ii) இதற்கு எவ்வாறு நிதியிடப்பட்டது என்பதையும் நிதியுதவியளித்தவர்களின் பெயர்களையும்,

(iii) இவ் வீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக இராணுவ வீரர்கள் அல்லது ஆயுதப்படையினர் செலுத்த வேண்டியிருந்த மொத்த தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0067 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) தற்போதைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழேயே அரச ஒலிபரப்பு முகவர்களுக்கும், தனியார் கம்பனிகளுக்கும் தற்பொது ஒலிபரப்பிற்கான உரிமம் வழங்கப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் தற்போதைய இலங்கைத் தொலைத்தொடர்பாடல் சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படும் ஒரு நிறுவனம் என்பதையும், எனவே ஒலிபரப்பு உரிமங்களை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனச் சட்டத்தின் கீழ் வழங்குவது, ஏனைய உரிமைக்காரர்களுக்கும் விண்ணப்பதாரிகளுக்கும் தீமையேற்படுத்தும் என்பதையும், இது ரீதியான வர்த்தகம், சம சந்தற்ப்பம் என்ற வகையில் கைச்சாத்தான உலக வர்த்தக நிறுவனம் மற்றும் ஏனைய சர்வதேச ஒப்பந்தங்களுடன் முரண்படுகின்றது என்பதையும் அவர் அறிவாரா என்பதை குறிப்பிடுவாரா?

(இ) தொலைக்காட்சி ஒலிபரப்பு உரிமங்கள் வழங்கப்படும் தற்போதைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் இவ்வேற்பாடுகளை சட்டவலுவற்ற தாக்குவதற்கும் தற்போதைய இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்திலோ அல்லது அதையொத்த ஒன்றிலோ இவ் ஏற்பாடுகளை மீள அறிமுகம் செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0160 / ' 09

கௌரவ விஜித ரணவீர,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகப் பிரிவுக்குள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் படி பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத, ஆயினும் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள இடங்கள் இருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவ்விடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) (i) தற்போது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப் பட்ட நினைவுத்தூபிகளை பேணுவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும் ,

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்,

(iii) அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது எவ்வாறென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2009, ஜூலை 07, செவ்வாய்க்கிழமை)**

0161 / ' 09

கௌரவ விஜித ரணவீர,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுனுகம்வெஹர பிரதேச செயலகப் பிரிவுக்குள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் படி பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத, ஆயினும் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள இடங்கள் இருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவ்விடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) (i) தற்போது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப் பட்ட நினைவுத்தூபிகளை பேணுவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும் ,

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்,

(iii) அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது எவ்வாறென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0162 / ' 09

கௌரவ விஜித ரணவீர,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவுக்குள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் படி பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத, ஆயினும் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள இடங்கள் இருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவ்விடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) (i) தற்போது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப் பட்ட நினைவுத்தூபிகளை பேணுவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும் ,

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்,

(iii) அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது எவ்வாறென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0163 / ' 09

கௌரவ விஜித ரணவீர,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவுக்குள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் படி பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத, ஆயினும் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள இடங்கள் இருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவ்விடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) (i) தற்போது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப் பட்ட நினைவுத்தூபிகளை பேணுவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும் ,

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்,

(iii) அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது எவ்வாறென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0164 / ' 09

கௌரவ விஜித ரணவீர,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவுக்குள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் படி பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத, ஆயினும் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள இடங்கள் இருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவ்விடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) (i) தற்போது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப் பட்ட நினைவுத்தூபிகளை பேணுவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும் ,

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்,

(iii) அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது எவ்வாறென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0165 / ' 09

கௌரவ விஜித ரணவீர,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அங்குனுகொலபெஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவுக்குள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் படி பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத, ஆயினும் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள இடங்கள் இருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவ்விடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) (i) தற்போது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப் பட்ட நினைவுத்தூபிகளை பேணுவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும் ,

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்,

(iii) அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது எவ்வாறென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0166 / ' 09

கௌரவ விஜித ரணவீர,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்கல்ல பிரதேச செயலகப் பிரிவுக்குள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் படி பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத, ஆயினும் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள இடங்கள் இருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவ்விடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) (i) தற்போது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப் பட்ட நினைவுத்தூபிகளை பேணுவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும் ,

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்,

(iii) அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது எவ்வாறென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0167 / ' 09

கௌரவ விஜித ரணவீர,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவுக்குள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் படி பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத, ஆயினும் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள இடங்கள் இருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவ்விடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) (i) தற்போது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப் பட்ட நினைவுத்தூபிகளை பேணுவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும் ,

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்,

(iii) அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது எவ்வாறென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0168 / ' 09

கௌரவ விஜித ரணவீர,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல பிரதேச செயலகப் பிரிவுக்குள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் படி பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத, ஆயினும் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள இடங்கள் இருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவ்விடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) (i) தற்போது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப் பட்ட நினைவுத்தூபிகளை பேணுவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும் ,

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்,

(iii) அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது எவ்வாறென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0169 / ' 09

கௌரவ விஜித ரணவீர,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கட்டுவன பிரதேச செயலகப் பிரிவுக்குள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் படி பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத, ஆயினும் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள இடங்கள் இருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவ்விடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) (i) தற்போது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப் பட்ட நினைவுத்தூபிகளை பேணுவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும் ,

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்,

(iii) அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது எவ்வாறென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0170 / ' 09

கௌரவ விஜித ரணவீர,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஓகெவெல பிரதேச செயலகப் பிரிவுக்குள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் படி பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத, ஆயினும் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள இடங்கள் இருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவ்விடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) (i) தற்போது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப் பட்ட நினைவுத்தூபிகளை பேணுவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும் ,

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்,

(iii) அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது எவ்வாறென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0171 / ' 09

கௌரவ விஜித ரணவீர,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேச செயலகப் பிரிவுக்குள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் படி பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத, ஆயினும் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள இடங்கள் இருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவ்விடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) (i) தற்போது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப் பட்ட நினைவுத்தூபிகளை பேணுவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும் ,

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்,

(iii) அதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது எவ்வாறென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

---

## 2009, ஜூலை 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0212 / ' 09

கௌரவ பேமசிறி மானகே,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தில் தனியார் பாதுகாப்புச் சேவையொன்று நடத்தப்படுவதை அவர் அறிவாரா,

(ஆ) (i) இப் பாதுகாப்புச் சேவையின் பெயர் மற்றும் முகவரி யாவையென்பதையும்,

(ii) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தில் இப் பாதுகாப்புச் சேவை, சேவை நடவடிக்கைகளை எப்போது ஆரம்பித்தது என்பதையும்,

(iii) இப் பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்த பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள், முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0213 / ' 09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரிகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) சமுத்திர பல்கலைக்கழகமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறெனின் சமுத்திர பல்கலைக்கழகம் எப்போது நிறுவப்பட்டது என்பதையும்,

(ii) அந்த சமுத்திரப் பல்கலைக்கழகத்தினால் இதுவரை எத்தனை பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்,

(iii) அந்தப் பட்டதாரிகளில் எத்தனைப் பேருக்கு கடற்றொழில் துறையில் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0068 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) தற்போதைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் (SLBC ) சட்டத்தின் கீழேயே அரசாங்க ஒலிபரப்பு முகவர்களுக்கும் தனியார் கம்பனிகளுக்கும் வானொலி ஒலிபரப்பிற்கான உத்தரவுப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்றன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் (SLBC ) தற்போதைய இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்பதையும், வானொலி ஒலிபரப்பு உத்தரவுப்பத்திரங்களை தற்போதைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் விநியோகிப்பதானது ஏனைய விண்ணப்பதாரிகளையும் உத்தரவுப் பத்திரங்களையும் ஓர் அனுகூலமற்ற நிலைக்கு உள்ளாக்குவதுடன், நியாயமான வர்த்தகம் மற்றும் சமமான வாய்ப்புக்கள் போன்றவற்றைக் கருத்திற் கொள்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ள உலக வர்த்தக சங்க (WTO ) மற்றும் ஏனைய சர்வதேச உடன்படிக்கைகள் மீறப்படுகின்றன என்பதையும் அவர் அறிவாரா?

(இ) வானொலி ஒலிபரப்பு உத்தரவுப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்ற, தற்போதைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டத்தின் ஏற்பாடுகளை நீக்குவதற்கும் இந்த ஏற்பாடுகளை தற்போதைய இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டம் அல்லது அது போன்றதொரு சட்டத்தின் கீழ் மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0069/ ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த 02 வருடங்களில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறையாக்கல் ஆணைக்குழுவினால் (TRCSL)வழங்கப்பட்ட எல்லா நிரந்தர மற்றும் செல்லிட தொலைத்தொடர்பாடல் உரிமங்களின் விபரங்களையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இந்தத் தொலைத் தொடர்பாடல் உரிமங்கள் அரசாங்க ஆதனங்களை வழங்குவதற்கு விதித்துரைக்கப்பட்ட அரசாங்க கேள்விப்பத்திர நடவடிக்கை முறைகளின் பிரகாரம் வழங்கப்பட்டனவா என்பதையும்; அத்துடன்,

(ii) ஒவ்வொரு தொலைத்தொடர்பாடல் உரிமத்தையும் வழங்கியதன் மூலம் திரட்டப்பட்ட வருமானங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0070 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த 02 வருடங்களில் அமைச்சினால் வழங்கப்பட்ட தொலைக்காட்சி மற்றும் வானொலி என்பவற்றின் ஒளி மற்றும் ஒலிபரப்பிற்கான அனைத்து உரிமங்களினதும் விபரங்களை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வுரிமங்கள் ஒப்பந்த அடிப்படையிலா வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) பின்பற்றப்பட்ட நடைமுறையையும்,

(iii) ஒவ்வொரு உரிம வழங்கலாலும் அரசிற்குக் கிடைத்த வருமானத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2009, ஜூலை 08, புதன்கிழமை)**

0066 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2008 ஆம் ஆண்டில் உள்ளவாறாக இலங்கையின் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் அல்லது வாக்கெடுப்புப் பிரிவிலும் உள்ள பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேலே சொல்லப்பட்ட ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் உள்ள,

(i) மொத்த சனத்தொகை,

(ii) ஆண்கள் மற்றும் பெண்களின் விகிதாசாரம்,

(iii) அவர்களின் வயதுப் பிரிவுகள்,

(iv) வாக்காளர்களின் சமய ரீதியான விகிதாசாரம், இன ரீதியான விகிதாசாரம்

ஆகியவற்றை அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2009, ஜூலை 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0071 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறையாக்கல் ஆணைக்குழுவினால் (TRCSL) கடந்த 02 வருடங்களில் வழங்கப்பட்ட எல்லா வானொலி அலைவரிசை (தொகுதிகளின்) விபரங்களை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இந்தத் வானொலி அலைவரிசை (தொகுதிகள்) உரிமங்கள் அரசாங்க ஆதனங்களை வழங்குவதற்கு விதித்துரைக்கப்பட்ட அரசாங்க கேள்விப்பத்திர நடவடிக்கைமுறைகளின் பிரகாரம் வழங்கப்பட்டனவா என்பதையும்; அத்துடன்,

(ii) ஒவ்வொரு அலைவரிசை (தொகுதிகள்) உரிமத்தையும் வழங்கியதன் மூலம் திரட்டப்பட்ட வருமானங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2009, ஜூலை 10, வெள்ளிக்கிழமை

### பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்தல்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 06, 2007) "வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் தமது அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கு ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [ பா.3/ '05]

பா.1 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஆயுதங்களை பதிவு செய்தல்,— இலங்கையிலுள்ள அனைத்து ஆயுதங்களையும் பதிவுசெய்ய வேண்டுமெனவும் அவ்வாறு பதிவு செய்ததின் பின்னரும் யாரிடமாவது அதிகாரமற்ற ஆயுதங்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த நபருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு 20 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.2 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— வங்கி அலுவலக நேரத்தை நீடித்தல்,— நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாக வங்கி அலுவலக நேரத்தினை 9.00 மணி முதல் 16.00 மணிவரை நீடிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.3 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுதல்,— மிக சுதந்திரமாகவே மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவது நாட்டின் ஒழுக்கவிழுமியங்களுக்கு பங்கமேற்படுத்தி வருவதால் கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.4 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்களில் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளைபயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.5 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.6 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.7 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.8 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற் படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறுமாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.9 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் போதும் ஒத்திவைக்கும் போதும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.10 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பா டகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.11 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப் படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயசார்பற்ற படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.12 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடக வியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.13 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாதாந்த சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.14 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.15 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.16 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.17 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.18 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்று உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு ''விசேட வழக்குத் தொடுநர்'' எனப்படும் பதவியொன்று உருவாக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.19 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தனிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.20 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22 /' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.23 /' 09

கௌரவ லஷ்மன் நிபுணஆரச்சி,— ஓய்வு பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வு பணிக்கொடை பெற்றுக்கொள்ளப்படாத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கேகாலை மாவட்டத்தில் நூதனசாலை யொன்றினை தாபித்தல்,— கேகாலை மாவட்டத்தில் உள்ள புராதன, கலாசார, தேசிய விழுமியங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் தொல்பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலுமாக நூதனசாலையொன்று தாபித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.26 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய கொள்கை நிர்ணயம் தொடர்பில் தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.27 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலை செய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில்

ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.28 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— புதிய கண்டுபிடிப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப் பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற் காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.29 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளைமேற்கொள்ளும் உள்நாட்டு கைத் தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.30 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— நீதித்துறை, காவல்துறை மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமித்தல்,— சமூகத்தில் வியாபித்து வரும் குற்றச் செயல்களை குறைப்பதற்காகவும், குற்றவியல் சட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் குறைத்து அதனை மேம்படுத்தியும் காணித் தகராறுகள் உட்பட நீதிமன்றங்களில் குவிந்திருக்கும் விசாரணைகளின் தேக்க நிலையை நீக்குவதற்காகவும் மற்றும் நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகியவற்றினை நவீன மயப்படுத்தி துரித சேவைகளை வழங்குதனை நோக்கமாகவும் கொண்டு நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகிவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழு வொன்றினை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.31 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.32 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.33 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப் பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக்கொடுப் பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருது கின்றது.

பா.34 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களையும் இயக்குனர் சபைகளையும் நியமித்தல்,— அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களாகவும் இயக்குனர் சபை உறுப்பினர்களாகவும் தொழில்சார் கல்வித் தகைமைகள், அனுபவங்கள் உள்ளவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.35 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கிராம உத்தியோகப் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயித்தல்,— நாடு முழுவதும் மீண்டும் நில அளவீடொன்றினை மேற்கொண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.36 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஶ்ரீ லங்கா, வெளிநாட்டு சேவைக்கு வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே ஆட்சேர்த்தல்,— ஶ்ரீ லங்கா, வெளிநாட்டு தூதுவராலய சேவைக்கு ஆட்சேர்க்கும் போது வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே தீர்மானம் எடுப்பதுடன் அடிப்படைக் கல்வித் தகைமைகளை பரிசீலித்தலே நேர்முகப்பரீட்சையின் போது மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.37 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதலும் ஒரே நீதிமன்றத்தில் இடம்பெறக்கூடிய வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.38 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்களை வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.39 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளானவர்களுக்கான நிவாரணம் அளிக்குமுகமாக சனாதிபதி ஆணைக்குழு,— ஆரம்ப காலம் முதல் இன்றுவரை தாம் கொண்ட அரசியல் கொள்கை காரணமாக அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளானவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்து நிவாரணம் வழங்குவதற்காக பூரண பலமுடைய சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.40 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை

எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர்களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.41 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன் றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.